செ.வெ.எண்:04 நாள்:05.08.2020

# வீட்டுவரியினை மீளப்பெறும் தொகையினை உயர்த்தி வழங்குதல்.

தமிழ்நாட்டினை பூர்வீகமாக் கொண்ட முப்படைகளில் பணிபுரிந்து போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர், வீரதீர செயலுக்கான விருது பெற்றவர்கள், போர் விதவையர் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்களின் விதவையர்கள், தாங்கள் வசிக்கும் வீட்டிற்காக செலுத்தும் வீட்டுவரியினை, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வீட்டுவரி சலுகையாக மீள வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது நகராட்சி நிர்வாகங்களில் வரிகள் உயர்த்தப்பட்டதை கருத்தில் கொண்டு வீட்டுவரியினை அதிகபட்சம் ரூ.10,000/- அல்லது செலுத்தப்பட்ட தொகை இதில் எந்தத் தொகை குறைவோ அத்தொகையினை வீட்டுவரிச் சலுகையாக மீள வழங்கப்படும்.

இச்சலுகை 01-10-2019-க்கு பின்னர் வரும் அரையாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு, திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை அசல் படைவிலகல் சான்று / அடையாள அட்டையுடன் நேரில் அணுகிடுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த. அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**